ஓம் சக்தி

# மந்திரக் கூறு

ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!



| | | |
|---|---|---|
| 1. | அருட்பெருஞ் சோதியே | ஓம் சக்தி ஓம் |
| 2. | தனிப்பெருங் கருணையே | ஓம் சக்தி ஓம் |
| 3. | குவிமுகிழ் ஏந்தினாய் | ஓம் சக்தி ஓம் |
| 4. | குறைகள் தவிர்ப்பாய் | ஓம் சக்தி ஓம் |
| 5. | குழந்தை மனத்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 6. | குவலயம் ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 7. | குணங்கள் கடந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 8. | கோதில் தவத்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 9. | அனலில் பிறந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 10. | அன்பில் விளைந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 11. | அறிவில் நிறைந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 12. | அது இது ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 13. | இன்பங் கொழித்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 14. | எழுச்சி கனிந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 15. | எண்ணம் உறைந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 16. | இதயம் மறைந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 17. | கன்னல் மொழியாய் | ஓம் சக்தி ஓம் |
| 18. | கருத்தில் வளர்ந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 19. | கவலைகள் கொல்வாய் | ஓம் சக்தி ஓம் |
| 20. | கடமை சொல்வாய் | ஓம் சக்தி ஓம் |
| 21. | மலரில் இருப்பாய் | ஓம் சக்தி ஓம் |
| 22. | மனத்தில் உறைவாய் | ஓம் சக்தி ஓம் |
| 23. | மடமை அகற்றுவாய் | ஓம் சக்தி ஓம் |
| 24. | மதியை நிறைப்பாய் | ஓம் சக்தி ஓம் |
| 25. | விதியைப் பிசைவாய் | ஓம் சக்தி ஓம் |
| 26. | வீரங் கொடுப்பாய் | ஓம் சக்தி ஓம் |
| 27. | உலகின் வடிவே | ஓம் சக்தி ஓம் |
| 28. | ஓங்காரப் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 29. | ஒருதரம் சொல்லவே | ஓம் சக்தி ஓம் |
| 30. | உண்மை விளங்குமே | ஓம் சக்தி ஓம் |
| 31. | மறுதரம் சொல்லவே | ஓம் சக்தி ஓம் |
| 32. | மனமும் நிறையுமே | ஓம் சக்தி ஓம் |
| 33. | எண்ணக் கருவே | ஓம் சக்தி ஓம் |
| 34. | இதய மலரே | ஓம் சக்தி ஓம் |
| 35. | வண்ணக் கொலுவே | ஓம் சக்தி ஓம் |
| 36. | வளருங் கொழுந்தே | ஓம் சக்தி ஓம் |
| 37. | மண்ணின் வளமே | ஓம் சக்தி ஓம் |
| 38. | மலரின் மணமே | ஓம் சக்தி ஓம் |
| 39. | நீரின் குளுமை | ஓம் சக்தி ஓம் |
| 40. | நிலவின் ஒளிமை | ஓம் சக்தி ஓம் |

| | | |
|---|---|---|
| 41. | விண்ணின் விரிவே | ஓம் சக்தி ஓம் |
| 42. | விளங்குஞ் சுடரே | ஓம் சக்தி ஓம் |
| 43. | பூதப் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 44. | புனிதப் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 45. | பொருந்துஞ் செயலே | ஓம் சக்தி ஓம் |
| 46. | புண்ணியப் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 47. | நாதப் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 48. | நல்லன யாவுமே | ஓம் சக்தி ஓம் |
| 49. | அணுவின் விளக்கமே | ஓம் சக்தி ஓம் |
| 50. | அம்பலச் செல்வமே | ஓம் சக்தி ஓம் |
| 51. | அழகில் மிளிர்ந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 52. | அனைத்தும் ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 53. | பரந்த ஜோதி தத்துவமே | ஓம் சக்தி ஓம் |
| 54. | பரம்பொருள் ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 55. | சிவானந்த விருந்தே | ஓம் சக்தி ஓம் |
| 56. | சிவப்பொருள் ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 57. | உணர்வுமெய் வழிப்பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 58. | மேதினி ஆள்வாய் | ஓம் சக்தி ஓம் |
| 59. | ஊற்று முறையே | ஓம் சக்தி ஓம் |
| 60. | உள்ளொளி ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 61. | காற்றாய் ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 62. | கருவுரு ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 63. | கடத்தில் உறைந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 64. | கண்மணி ஆனாய் | ஓம் சக்தி ஓம் |
| 65. | குழந்தை உருவே | ஓம் சக்தி ஓம் |
| 66. | குருவே அறிவே | ஓம் சக்தி ஓம் |
| 67. | குணமே மணமே | ஓம் சக்தி ஓம் |
| 68. | கோதில் மொழியே | ஓம் சக்தி ஓம் |
| 69. | வீர விருந்தே | ஓம் சக்தி ஓம் |
| 70. | விவேக மருந்தே | ஓம் சக்தி ஓம் |
| 71. | சேரும் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 72. | செந்தமிழ் விருந்தே | ஓம் சக்தி ஓம் |
| 73. | சினத்தை அறுப்பாய் | ஓம் சக்தி ஓம் |
| 74. | செம்மை தருவாய் | ஓம் சக்தி ஓம் |
| 75. | உணர்வே ஒளியே | ஓம் சக்தி ஓம் |
| 76. | உள்ளுறை விருந்தே | ஓம் சக்தி ஓம் |
| 77. | பிரணவப் பொருளே | ஓம் சக்தி ஓம் |
| 78. | பிறைமுடி யணிந்தாய் | ஓம் சக்தி ஓம் |
| 79. | பெரும் பொருளானாய் | ஓம் சக்தி ஓம் |
| 80. | பிழைகள் தவிர்ப்பாய் | ஓம் சக்தி ஓம் |
| 81. | கண்ணே மணியே | ஓம் சக்தி ஓம் |
| 82. | கருவாம் மறையே | ஓம் சக்தி ஓம் |
| 83. | ஓம் பொருளானாய் | ஓம் சக்தி ஓம் |
| 84. | ஓம் சக்தியானாய் | ஓம் சக்தி ஓம் |
| 85. | உள் பொருளானாய் | ஓம் சக்தி ஓம் |
| 86. | உயிர்ப் பொருளானாய் | ஓம் சக்தி ஓம் |
| 87. | அணுவின் தொடர்பே | ஓம் சக்தி ஓம் |
| 88. | அனைத்துயி ரானாய் | ஓம் சக்தி ஓம் |
| 89. | ஆன்மிக நெறியே | ஓம் சக்தி ஓம் |

| | | |
|---|---|---|
| 90. | அங்கிங் கெங்குமே | ஓம் சக்தி ஓம் |
| 91. | சாவித்திரி காயத்திரியே | ஓம் சக்தி ஓம் |
| 92. | இராசேசுவரி சங்கரியே | ஓம் சக்தி ஓம் |
| 93. | பயிரவி சாரதையே | ஓம் சக்தி ஓம் |
| 94. | பாரதி பரமேசுவரியே | ஓம் சக்தி ஓம் |
| 95. | பார்வதி பர்வதியே | ஓம் சக்தி ஓம் |
| 96. | காளி மாரியே | ஓம் சக்தி ஓம் |
| 97. | கன்னி வாலையே | ஓம் சக்தி ஓம் |
| 98. | வாணி வேணியே | ஓம் சக்தி ஓம் |
| 99. | நிரந்தரி புரந்தரியே | ஓம் சக்தி ஓம் |
| 100. | சாமுண்டி சந்தானியே | ஓம் சக்தி ஓம் |
| 101. | ஆதி சக்தியே | ஓம் சக்தி ஓம் |
| 102. | பாரா சக்தியே | ஓம் சக்தி ஓம் |
| 103. | பூரணி காரணியே | ஓம் சக்தி ஓம் |
| 104. | நாரணி தேவியே | ஓம் சக்தி ஓம் |
| 105. | மருவூர் அரசியே | ஓம் சக்தி ஓம் |
| 106. | மனமலர் வல்லியே | ஓம் சக்தி ஓம் |
| 107. | அருகில் நின்றோமே | ஓம் சக்தி ஓம் |
| 108. | அணைத்தே காப்பாயே | ஓம் சக்தி ஓம் |

ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம் சக்தி! – ஓம்!
ஓம்! ஓம்! ஓம்!

Contents of this site © copyright 2015
www.omsakthiamma.org.
All rights reserved.